WWW.KALVIKURAL.COM

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

தொடக்கக்கல்வி – கரூர், திருப்பூர், நாமக்கல், ஈரோடு மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாக தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டு பின்னர் 1-5-2006இல் முறையான ஊதியம் அளிக்கப்பட்டு பணிவரன்முறை செய்யப்பட்ட 28 இடைநிலை ஆசிரியர்களுக்கு, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்கு நீதிப் பேராணை மனு (எம்டி) எண். 2501/2013 மற்றும் பல்வகை மனு (எம்டி) எண். 2/2013ல் வழங்கப்பட்ட 22-10-2013 நாளிட்ட தீர்ப்பாணைக்குட்பட்டு, அவர்கள் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் முறையான பணியமைப்பின் கீழ் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (ந.க.3(1)த் துறை**

அரசாணை (3டி)எண். 4 நாள் : 21-1-2015
திருவள்ளுவராண்டு 2046
தை 7

படிக்கப்பட்டவை :

1. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண். 2501/2013 மற்றும் பல்வகை மனு (எம்.டி.) எண். 2/2013ல் வழங்கப்பட் தீர்ப்பாணை, நாள் 23-10-2013.
2. தொடக்கக்கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ந.க.எண்.30415/இ3/2013, நாள் 23.12.2013, 24-4-2014, 18-7-2014 மற்றும் 19-11-2014.

**ஆணை :**

தொடக்கக்கல்வி அலகில், கரூர், திருப்பூர், நாமக்கல் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி / நடுநிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாக பணிபுரியும் திருமதி.இரா.ரதிதேவி மற்றும் 7 நபர்கள் தங்களை அரசாணை (3டி) எண். 78, பள்ளிக்கல்வித்துறை, நாள் 25-5-2012ன்படி, தாங்கள் இடைநிலை ஆசிரியர் பதவியில் தொகுப்பூதிய அடிப்படையில் பணியில் சேர்ந்த 2004-2005ஆம் கல்வி ஆண்டு முதல் பணிவரன்முறை செய்து உரிய பணப்பயன்களை பெற்று வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடுத்த வழக்கு நிதிப்பேராணை மனு (எம்டி) எண். 2501/2013 மற்றும் பல்வகை மனு ——— எண். 2/2013ல் நீதி பெறப்பட்ட மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட 22-10-2013ம் நாளிட்ட தீர்ப்பாணையில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

"........ without expressing any opinion as to whether the petitioners are entitled for registr......tion from the date of their initial appointment, the writ petition is disposed of with a direction to the first

WWW.KALVIKURAL.COM

respondent to consider the representation of the petitioners dated 15-1-2013 in the light of G.O.(eD) No.78, School Education (GZ) Department, dated 25-5-2012. Within a period of four months from the date of receipt of a copy of this order. Consequently the connected miscellaneous petition is closed. No costs....."

2. மேலே தீர்ப்பாணையில், குறிப்பிட்டுள்ள அரசாணை (3டி) எண். 78, பள்ளிக்கல்வி (ஜி2)த் துறை, நாள் 25–5–2012ல், சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிப்பேராணை மனு எண். 30734/2008ல் வழங்கப்பட்ட 27–11–2009 நாளிட்ட தீர்ப்பாணை மனு எண். 879/2006ல் வழங்கப்பட்ட 27–4–2010 நாளிட்ட தீர்ப்பாணை ஆகியவற்றின் அடிப்படையில் அம்மனுதாரர்களுக்கு அவர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து முறையான ஊதிய விகிதம் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. இவ்வழக்கில் காணும் மனுதாரர்களான திருமதி.இரா.ரதிதேவி மற்றும் 7 நபர்களை, அரசாணை (3டி) எண். 78, பள்ளிக்கல்வி (ஜி2) துறை, நாள் 25–5–2012ன்படி அவர்கள் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் முறையான பணியமைப்பின் கீழ் பணிவரன்முறை செய்யக் கருதப்பட்டதில், இவர்களை ஒத்த தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டு, பின்னர் 1–1–2006 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு, தற்போது முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய வழக்கு தொடுத்த / தொடுக்காத நபர்கள் சார்ந்து பொது ஆணை வெளியிடலாம் எனக் கருதப்பட்டு, அத்தகைய ஆசிரியர்கள் சார்ந்த பணி விவரங்களை தொகுத்து அனுப்புமாறு தொடக்கக்கல்வி இயக்குநரிடம் கோரப்பட்டது.

4. தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டு பின்னர் 1–1–2006ல் பணிவரன்முறை செய்யப்பட்ட மொத்த இடைநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை 49 என்றும் அவர்களில் நீதிமன்ற வழக்குகள் சார்ந்து பல்வேறு அரசாணை / செயல்முறைகளில் முன்தேதியிட்டு தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 21 என்றும், எஞ்சியுள்ள நீதிமன்ற வழக்கு தொடுத்த / தொடுக்காத தகுதி வாய்ந்தவர்களில் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 24 ஆசிரியர்கள் மற்றும் திருப்பூர், நாமக்கல், ஈரோடு மற்றும் திருச்சி மாவட்டத்தில் தலா ஒருவர் ஆக மொத்தம் 28 இடைநிலை ஆசிரியர்களுக்கு மட்டுமே முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்ய கருதப்பட வேண்டியவர்கள் என்றும், எனவே அவர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் பணியில் சேர்ந்த நாள்முதல் முறையான பணி அமைப்பின்கீழ் முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வது சார்பாக உரிய ஆணை வழங்குமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் தொடக்கக்கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

5. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பாணையினை நடைமுறைப் படுத்திடும் பொருட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் காணும் தொடக்கக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து, கரூர், திருப்பூர், நாமக்கல், ஈரோடு மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி / நடுநிலைப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாக தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டு, பின்னர் 1–1–2006 முதல் காலமுறை ஊதியத்தில் பணிவரன்முறை செய்யப்பட்ட இணைப்பில் குறிப்பிட்டுள்ள 28 இடைநிலை ஆசிரியர்களை அவர்கள் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் முறையான பணியமைப்பின் கீழ் பணிவரன்முறை செய்து பணப்பயன் வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

WWW.KALVIKURAL.COM

WWW.KALVIKURAL.COM

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 1234/Edn-II/2015, நாள் 20-1-2015ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-6.

சம்பந்தப்பட்ட நபர்கள்

...... (தொடக்கக்கல்வி இயக்குநர் வழியாக)

மாநிலக் கணக்காயர், சென்னை-16.

மாநில கருவூல மற்றும் கணக்கு இயக்குநர்,
சென்னை-15.

மாவட்ட கருவூல அலுவலர்,
கரூர், திருப்பூர், நாமக்கல், ஈரோடு, திருச்சி மாவட்டம்.

மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்
கரூர், திருப்பூர், நாமக்கல், ஈரோடு, திருச்சி மாவட்டம்.

WWW.KALVIKURAL.COM